NEW WAY OF BEING CHURCH

newbec

31 மார்ச் 2024
ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக பாஸ்கா மறைபொருளை வாழ்தல்

# அவர் உயிரோடிருக்கிறார்

மில் ஹில் என்னும் அருள்பணியாளர் ஒருவர் 1970 ஆம் ஆண்டுகளில் சரவாக்கில் உள்ள ஒரு தேவாலயத்தில் பணிபுரிந்தார். அவர் ஒரு இசைக்கலைஞர் மற்றும் சிறந்த கதை சொல்பவர். ஒரு ஆண்டு உள்ளூர் தேவாலயத்தில் பெரியவர்கள், பள்ளிக்குழந்தைகள் அனைவரையும் கூட்டி, “அவர் உயிரோடிருக்கிறார்” என்ற ஒரு நாடகத்தை நடத்தினார்.

நாடகம் மாபெரும் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல், இளம் மாணவர்களின் மத்தியிலும் ஆழமாகப் பதிந்தது. அதில் பலரும் நம்பிக்கையைத் தொடர்ந்து வாழ்ந்து காட்டியது மட்டுமல்லாமல் இயேசுவின் கதையை ஆர்வத்துடன் பிறரோடுப் பகிர்ந்துகொண்டார்கள்.

இன்றைய முதல் வாசகத்தில் பேதுரு உருமாற்றம் பெற்ற சீடரானார். அவர் கிறிஸ்துவை துணிவோடு அறிவித்தார். அதற்கு முன்னர் இயேசுவை தெரியாது என்று மறுதலித்திருந்தார். ஆனால் தூய ஆவியாரால் வலுவூட்டப்பெற்று, அனைவருக்கும் முன்னோடியானார். உயிர்த்தெழுதலைப் பற்றி நற்செய்தியில் குறிப்பிட்டிருப்பதை நினைவுகூருங்கள். பேதுருவும் யோவானும் ஓடிச்சென்று கல்லறை உள்ளே சென்று வெறுமையான கல்லறையைக் கண்டார்கள். இரண்டு சீடர்களின் எண்ண ஓட்டம் எதுவாக இருந்திருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம். அவர்களுக்குத் தெரியும். “அவர் உயிரோடிருக்கிறார்”

ஹென்றி நுவென் தன்னுடைய ஒரு நாளின் பயணம் என்ற கட்டுரையில் உயிர்த்தெழுதலின் காலை பற்றி விவரிக்கிறார்.

இயேசுவின் நண்பர்களுக்கு இது ஒரு நிகழ்ச்சி. அவரை அறிந்தவர்களுக்கு, அவரின் வார்த்தைகளை செவிமடுத்தவர்களுக்கு, அவரில் நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு இது ஒரு நிகழ்வு. மிகவும் நெருக்கமான ஒரு நிகழ்வு. ஒரு வார்த்தை, ஒரு சைகை. ஏதோ ஒன்று புதிதாகப் பிறக்கப்போகிறது என்ற படிப்படியான விழிப்புணர்வு. மிகச் சிறியது தான். அரிதாகத் தான் கவனத்தை ஈர்த்தது. ஆனால் உலகின் முகத்தையே மாற்றிவிட்டது. மகதலா மரியா அவரின் பெயர் அழைக்கப்பட்டதைக் கேட்டார். பேதுருவும் யோவானும் வெற்றுக்கல்லறையைக் கண்டார்கள். இயேசுவின் நண்பர்களின் உள்ளம் ஆர்வத்தால் பற்றியெறிந்தது.”அவர் உயிர்த்துவிட்டார் என்ற குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வார்த்தைகள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. அனைத்தும் மாறாமல் இருந்தாலும், அனைத்தும் மாறித்தான் இருந்தது.

இது அழகான ஒன்று தானே? இந்தச் சலுகை பெற்ற சீடர்களின் வாழ்க்கை உருமாற்றம் பெற்று, தொடர்ந்து அவர்களை வழிநடத்தும் தூய ஆவியானவரால் கிறிஸ்து என்னும் ஒளியை ஏந்திக்கொண்டு அந்த நெருப்பு பிறரையும் பற்றிக்கொள்ள அவர்கள் தொடர்ந்து செல்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து தொடர்ந்து இன்றும் அந்த ஒளி ஒளிர்ந்துகொண்டு இருக்கிறது. நாமும் அந்த சலுகையைப் பெற்றவர்களாக ஆகிவிட்டோம்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மிடையே இருக்கிறார். அந்த ஒளியை ஏந்திக் கொண்டு “அவர் உயிரோடிருக்கிறார்” என்று எல்லோரிடமும் துணிவோடு அறிக்கையிடுவோம்.

அனைவருக்கும் ஈஸ்டர் ஆசீர் உரித்தாகுக.

**மேற்கோள்: ஓ சாவே, உன் கொடுக்கு எங்கே? ஓ நரகமே, உன் வெற்றி எங்கே? கிறிஸ்து உயிர்த்துவிட்டார். நீ வெளியே தள்ளப்பட்டு விட்டாய்.**

– புனித ஜோன் கிறிஸோஸ்டோம்




### இன்றைய இறைவார்த்தை:

திப: 10: 34, 37-43

திருப்பாடல்: 118: 1-2, 16-17, 22-23

கொலோசையர்: 3: 1-4

மாற்கு 16: 1-7

INTERNAL CIRCULATION ONLY
BUL 13/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org